# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

MC.O.P. No.1555/2021

DEPOSITION OF WITNESS FOR PW-2

| | | |
|---|---|---|
| NAME | : | கடற்கரை |
| Father/ Husband NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of February 2024.

<u>முதல் விசாரணை</u> :–

இத்துடன் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இன்று சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. இறந்துபோனவரின் மனைவி தகவல் சொன்னதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து சம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். விபத்து சம்பந்தமாக வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. விபத்து நடந்த இடத்திற்கும் என்னுடைய கடைக்கு இடையே சுமார் 50 அடி தூரம் இருக்கும்.

அப்போது என்னுடைய கடையில் வியாபாரம் நடந்து கொண்டிருந்ததா என்றால் நான் கடையை விட்டு வெளியே பஸ் ஏற வந்தேன். விபத்து நடந்த ரோடு கிழமேல் ரோடு என்றால் சரிதான். கொம்பு குட்டி ஓட்டி வந்த மோட்டார் சைக்கிளின் பின்னால் ஒருவர் உட்கார்ந்து இருந்தார். எதிரே வந்த வண்டி என்ன வாகனம் என்றால் டாடா மோட்டார் வாகனமாகும். நான் டமார் என்று சத்தம்கேட்டு ஓடி போய் பார்க்கும்போது இரண்டுபேரும் வண்டியில் இருந்து விழுந்து காயத்தோடு இருந்தார்கள் என்றால் சரிதான். என் கண் முன்னால் நடந்தது. நான் போய் பார்க்கும்போது அவர் இறந்துவிட்டார். மற்றவர்கள் தூக்கி வைத்து இருந்தார்கள். அங்கிருந்தவர்கள் என்ன நடந்தது என்று என்னிடம் சொன்னார்கள் என்றால் நான் அங்கு தான் இருந்தேன். கொம்புகுட்டி எனக்கு ஏற்கனவே அறிமுகமானவர் தான். உறவினர் அல்ல. அவர் என் கடைக்கு ரொம்ப காலமாக வருவார், போவார். நான் விபத்தை பார்க்காமலேயே இறந்துபோன கொம்புகுட்டி என்பவர் எனக்கு பழக்கமானவர் என்பதால் மனுதாரர்களுக்கு நஷ்டஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அன்று கொம்புகுட்டி ெஹல்மெட் அணியவில்லை என்றால் சரியல்ல. அவருக்கு தலையில் பலமான அடி ஏற்பட்டிருந்தது. அன்று கொம்புகுட்டியும், அவர் பின்னால் அமர்ந்து இருந்தவரும் ெ ஹல்மெட் அணியவில்லை என்றும், வழக்கிற்காக அவர்கள் ெஹல்மெட் அணிந்திருந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ெ ஹல்மெட் உடைந்திருந்தது. நான் கூறுவது போன்று 1வது எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுனரின் கவனகுறைவால் விபத்து நடக்கவில்லை என்றும், இறந்துபோன கொம்புகுட்டி தான் எதிரே வந்த வாகனத்தை கவனிக்காமல் முன்னால் சென்ற வாகனத்தை முந்தும்போது 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மீது மதுபோதையில் தானாக மோதி விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.